அமரன்

# வைத்தியநாதய்யரின் வாழ்க்கை வரலாறு

இடன் சமைப் பாரி.
உடு. டி. 55ல்
11 பக்கத்தில்
ஊலம் சமம்
எழுப்பட்டது.
அ. ரவ. ர. ஸ்ரீநிவாஸ

ஆக்கியோன் :

ரா. ஸ்ரீநிவாஸ வர்தன்

பதிப்புரிமை] 1955 [விலை அணு 3

சத்தியமே ஜயம்



அமரர்: வைத்தியநாதையர்

# முகவுரை

எனது பள்ளிப் பருவத்திலிருந்து சுமார் 50 ஆண்டுகளாக மதுரை அ. வைத்தியநாதையர் அவர்களை எனக்கு நன்கு தெரியும். சுமார் 35 ஆண்டுகளாக அன்னருடன் நட்புக்கொண்டு ஐயரின் தலைமையின் கீழ்ப் பணியாற்றும் பாக்கியம் பெற்றேன். மனிதராகப் பிறந்தவர் இறப்பது திண்ணம். ஆனால் அவரவர் கடமைகளைச் சரிவரச் செய்து அமரவாழ்வு அடைதல் வேண்டும். ஐயர் நம் மத்தியிலிருந்து மறைந்து விட்டார். அன்னார் நடத்திய பற்றற்ற வாழ்வு நம் கண் முன் நிற்கின்றது. தமிழக இளைஞர்கள் ஐயரின் நேர்மையான வாழ்க்கையைக் கைக்கொள்ள மஹாசக்தி அருள் புரிவாளாக. ஐயரின் சரிதையை ஓர் சிறு நூல் வடிவத்தில் சித்தரித்துள்ளேன். குற்றம் களைந்து குணம் கொள்க. இதைச் சீக்கிரமே வெளிக் கொணரச்செய்த மதுரைநகர்ப் பிரபல புத்தக வர்த்தகர் ஸ்ரீமான் இ. மா கோபாலகிருஷ்ணக் கோனார் அவர்களுக்கும், நீண்டகால அரசியல் நண்பர் ஸ்ரீமான் A. நெல்லையப்ப பிள்ளை அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

மதுரை,
11—3—55.

ஈ. ஸ்ரீநிவாஸவரதன்,
(தேச ஊழியன்.)

# சேவையின் சிகரம்

## மதுரை

# அ. வைத்தியநாதையர்

## வாழ்க்கை வரலாறு

—o—

"செய்தல் உன் கடனே—அறம்
செய்தல் உன் கடனே—அதில்
எய்துறும் விளைவினில் எண்ணம் வைக்காதே"

என்ற கீதா வாக்கியத்திற்கு இலக்காக வாழ்க்கை நடத்தியவர் நமது மதுரை வைத்தியநாதையர். தமிழ் நாட்டில் சேவை செய்தவர்களின் சிகரமாக விளங்கி அமரவாழ்வெய்தினர். ஜீவராசிகளுக்கு வைத்தியனாக விளங்குபவன் சர்வேஸ்வரன். பிணியைக் கவனித்துக் கைம்மாறு கருதிச் சுகம்பெறச் செய்பவர்கள் வைத்தியர்கள். நாட்டில் ஏற்பட்ட அடிமைப் பிணியையும், ஹிந்து சமூகத்தில் தோன்றிய தீண்டாமைப் பிணியையும் கைம்மாறு கருதாமல் ஒழிக்கவே அவதரித்த பெருமான் நமது மதுரை வைத்தியநாதன்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

என்ற முதியோர் வாக்கிற்கிணங்க, எளிய குடும்பத்தில் பிறந்து, திறம்படக் கல்வி கற்றுச் சட்டப்பரீட்சையில் தேறி, மதுரைநகரில் வக்கீல் தொழிலில் தலை

சிறந்து நின்று, ஏராளமாகப் பொருள் தேடி, ஈட்டிய பொருளில் பெரும்பாகத்தைப் பெருமைக்கோ பதவிக்கோ செலவிடாது முழு மனத்துடன் பொதுஜன நன்மைக்கே செலவழித்துத் தானும் கடைசி மூச்சுள்ளவரை பாடுபட்டு அழியாப் புகழ் தேடிக்கொண்ட உத்தமர் நமது ஐயர்.

"தேச சேவையே தெய்வ பூஜை"

என்றபடி சென்ற முப்பத்தைந்து வருட காலமாகக் காந்திய சகாப்தத்தில், காந்தி அடிகளின் பிரதம லீடர்களில் ஒருவராக விளங்கிக் கதர் அபிவிருத்தி, மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை, ஹிந்தி பாஷையின் முன்னேற்றம், முதியோர் கல்வி ஆகிய திட்டங்களில் தமிழ்நாட்டில் சிறப்பாக மதுரை ஜில்லாவில் வெற்றி பெற உழைத்ததோடு, அதில் ஈடுபட்டு உழைக்கும் தொண்டர்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும் அள்ளிஅள்ளி வரையாது கொடுத்த வள்ளல் நமது ஐயர்.

"கொடுமையை எதிர்த்துநில்"

என்பதற்கிணங்கப் பொதுமக்களுக்கு இன்னல் விளைவிக்கும் சர்க்கார் அதிகாரிகளைக் கண்டித்து, உடனுக்குடன் பரிகாரம் தேடிக்கொடுத்துப் போராட்ட காலங்களில் சர்க்கார் போட்ட அனுவசிய அக்கிரமச் சட்டங்களை உடைத்தெறிந்து, முதலாவதாகச் சிறை சென்று வழிகாட்டியாகவிருந்து, மதுரையில் ஏற்பட்ட ஹிந்து - முஸ்லீம் சச்சரவுகளில் இருசாராரும் பயங்கர ஆயுதங்களுடன் ஒருவரையொருவர் தாக்கிச்

சண்டையிடும்பொழுது, எந்தவிதமான விளைவையும் கருதாமல், சரேலென்று நடுவில் பாய்ந்து, சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, இருசாராரும் சண்டையைநிறுத்தி விலகும்படி செய்து அஹிம்சாமூர்த்தியாயும், காந்தீயவாதியாயும் விளங்கிய தீரன் நமது ஐயர்.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே"

என்ற ஆன்றோர் சொற்படி, தீயணைக்கும் மோட்டார் வருவதற்கு முன்னே மதுரை மாநகரில் எங்காவது ஓர் மூலையில் தீப்பிடித்துக்கொண்டால், ஜனங்களைத் தப்புவிக்கவும், நெருப்பை அணைக்கவும் கச்சை கட்டிக்கொண்டு முன்னணியில் நின்றவர். 1922-ல் வைகை ஆற்றில் பெரும் வெள்ளம் வந்த காலத்தில் ஆற்றங்கரை யோரமுள்ள தெருக்களில் வசித்த மக்களை, வத்தைகட்டி, மீட்டி, அவர்களுக்காக உதவி செய்தவர். மில்களிலோ, மற்றக் கம்பெனிகளிலோ வேலை நிறுத்தம், சச்சரவு ஏற்பட்டால் அங்குச் சமாதானத்திற்குக் கூப்பிடுமுன் செல்பவர் ஐயர். அன்னார் வார்த்தையைக் கேட்டு முதலாளியும், தொழிலாளியும் கட்டுப்பட்டுச் சமரஸத்திற்கு உடன்படுவர். தேர்தல் பிரசாரங்களில் அரசியல்வாதிகளுக்குள் ஒருவருக் கொருவர் மனமாற்சரியம் ஏற்பட்டால் யாவரும் ஒப்புக்கொள்ளும் வண்ணம் ஒத்துப்போக வழிதேடுபவர். யுத்தகாலத்தில் பொது மக்களின் பீதியை ஒழிப்பதற்கு எல்லாக் கட்சிகளையும் ஒன்று சேர்த்து ஊர்காப்புச் சங்கங்களேற்படுத்தித் திறம்பட சலியாது உழைத்தவர். பர்மாவிலிருந்து வந்த அகதிகளின் பாதுகாப்புக்கும், நன்மைக்கும் முன்

னின்று உழைத்தவர். 'சேவையின் சிகரம்' நமது ஐயர்தான்.

## கூடலின் கோமான்

தமிழ்நாட்டிற்குத் தலைமை தாங்கும் பெருமையும், பாக்கியமும் மதுரை ஜில்லாவிற்கு வாய்த்தது என்றால் அதற்கு நமது ஐயர் அவர்களின் அன்பு மிக்க ஆதரவே முக்கிய காரணம். தொண்டர்களைச் சேர்த்தும், அவர்களுக்குக் காந்திய வழியில் உபதேசம் செய்தும், அவர்களுடைய குடும்ப நிலைமை விசாரித்துத் தக்க உதவி செய்தும் ஊக்குவித்தார். இதனால் 1922, 1923, 1930, 1932, 1942-ல் நாட்டில் நடைபெற்ற தேசியப் போராட்டங்களில் மதுரையில் தெருவிற்கு ஒருவர் வீதம் சிறை சென்றார்கள். 1923-ல் நாகபுரியில் நடைபெற்ற கொடிப்போராட்டத்திற்கும், 1930-ல் வேதாரண்யத்தில் உப்புச் சட்டத்தை மீறுவதற்கும், 1932-ல் சென்னையில் நடைபெற்ற ஜவுளிக் கடை மறியலுக்கும் சென்ற தொண்டர்களிற் பலர் கூடலம்பதியைச் சேர்ந்தவர்களே. முதல் முதலாக தமிழ்நாட்டில் 1922-ல் மதுரையிலிருந்துதான் பத்தொன்பது தொண்டர்கள் சிறை சென்றனர். 1923-ல் மதுரையில் இரண்டாம் முறை நடைபெற்ற கள்ளுக்கடை மறியலில் சுமார் நூறு பேர்களுக்கு அதிகமாகத் தண்டனை யடைந்தனர். பாரதி பாடல்களால் தமிழ்நாட்டைத் தட்டி யெழுப்பிய ஸ்ரீபாரதாஸ்ரமம், தேசபக்த சமாஜம், பாரதி பஜனை சமாஜம், 1927-ல் மதுரையில் ஆயுதச் சட்ட மறுப்பும் சென்னையில் நீல் சிலைப் போராட்டமும்

நடத்திய இளைஞர் படை ஆகிய ஸ்தாபனங்கள் எல்லாவற்றையும் ஆதரித்து, ஊக்கமும், உற்சாக மும் உதவியும் அளித்தவர் ஐயர். மதுரை மாநக ரின் லட்சக்கணக்கான மக்களுக்கு ஏகப்பிரதிநிதி, ஒரே குரல், ஒரே ஜீவன் நமது ஐயர் அவர்களே!

## தனிச் சிறப்பு

இவர் தேச சேவையில் தமுக்கடிப்பது முதல் தலைமைதாங்குவது வரை பொறுப்பேற்றுக் கொள் வார். சுகாதாரத்தின் பொருட்டுச் சாக்கடையை அள்ளித் தெருவைக் கூட்டிச் சுத்தம் செய்வதிலோ, சுயதேவையின் பொருட்டுக் கூடுமானவரை தினந் தோறும் ராட்டினம் நூற்பதிலோ, ஹிந்தியைப் பரப்புவதிலோ ஐயர் தவறியதில்லை. காலை மாலை நேரங்களில் ஐயரைப் பார்க்க அன்னார் வீட்டிற்கு நாம் சென்றால், கட்டுக்கட்டாக நெற்றியில் விபூதி அணிந்து, சிவனடியார்போன்று அன்னார் அமர்ந் திருப்பார் ஆசனத்தில். அக்காட்சியைப் பார்த்த மாத்திரத்தில் ஒருவருக்குத் தானகவே தெய்வபக்தி உண்டாகும். சிறை செல்லும் தொண்டர்களுக்கோ, சிறையினின்று விடுதலை பெறும் தொண்டர்க ளுக்கோ அன்னார் உதவிசெய்யத் தவறியதில்லை. மற்றும் கதர் வஸ்திராலயத்தில் ஐயர் அவர்கள் கணக்கில் மாதந்தோறும் தேசத் தொண்டரோ, ஏழை மாணவரோ, ஹரிஜன வகுப்பாரோ அன்னார் சொற்படி கதர் ஆடை வாங்கத் தவறமாட்டார்கள். தாம் சம்பாதிக்க ஆரம்பித்தது முதல் மரண

பரியந்தம் சில ஏழை மாணவர்களுக்குப் பள்ளிச் சம்பளம் கொடுத்து வந்தார்; மதுரைக் காலேஜ் போர்டுபோன்ற கல்வி ஸ்தாபனங்களிலும் அங்கம் வகித்துக் காரியங்களைச் செய்து வந்தார்; முதியோர் கல்விக்காகவும் சிரத்தை யெடுத்து வேலை செய்தார். மதுரை நகரில் பொது வாழ்வில் வசூலிக்கும் நன் கொடைகளில் ஐயரின் கையெழுத்துத்தான் முன்ன தாக நிற்கும். தனக்கிருக்கும் சிறிது ஆஸ்தியிலும் சிறந்த இரண்டு ஏக்கரா நஞ்சை நிலத்தைப் பூமிதான யக்ஞத்திற்கு மனமுவந்தளித்தார்.

## வாழ்க்கை

நமது ஐயர் அவர்களை "ஏ. வி." என்றும், ஏ. வைத்தியநாதையர் என்றும் நமது தமிழகம் நன்கு அறியும். அன்னார் புதுக்கோட்டையில் 1890-ம் ஆண்டு அருணசலமையருக்கும், லட்சுமி அம்மாளுக் கும் இரண்டாவது புத்திரராகப் பிறந்தார். அன்னா ருக்கு மூன்று சகோதரர்களும், நான்கு சகோதரிக ளும் உண்டு. தகப்பனர் புதுக்கோட்டை மஹா ராஜா காலேஜில் கணித ஆசிரியராக இருந்தார்; ஓர் தத்துவ ஞானி போன்று வாழ்க்கை நடத்தினர்; பென்ஷன் பெற்றதும் குடும்பத்துடன் மதுரை நகர் வந்து சேர்ந்தார்; எளிய குடும்பமாயிருந்தும் ஆடவர் அனைவரையும் ஆங்கிலம் கற்க ஏற்பாடு செய்தார். ஐயர் முதலில் மதுரைக் கல்லூரியிலும், பின்பு பிரஸி டென்ஸி காலேஜிலும் கல்விகற்றுத் தேர்ந்தார். படிப்பு முடிந்ததும் திருச்சி எஸ். பி. ஜி. ஹைஸ்கூலி லும், மசூலிப்பட்டணம் ஹிந்து ஹைஸ்கூலிலும்

ஆசிரியராக வேலை பார்த்தார். 1912-ம் வருடம் வக்கீல் தொழிலை ஆரம்பித்தார். ஐயரின் குடும்பம் பெரியது; அமைதி இராது; இருந்தாலும் அக்குடும்பத்தில் தாய் தகப்பன், சகோதர சகோதரி, உற்றார் உறவினரிடம் மனங்கோணாது நடந்து வருவர். தேசத்தையும் தனது குடும்பமாகவே நினைத்து வாழ்க்கை நடத்திய பெருமை அன்னாருக்கு உண்டு.

## தொழிலில் மேன்மை

ஆரம்பக் காலத்தில் மதுரை நகரின் பிரபல வக்கீல் லா நடேசையரிடம் ஜூனியராக அமர்ந்து, வேலை கற்றுக்கொண்டார். சுமார் பத்து வருட காலத்திற்குள் தொழிலில் பிரபலமடைந்து, சுமார் ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமாகவே சம்பாதிக்க ஆரம்பித்தார். குடும்பநிலை ஓங்கிவரும் நாளில் 1922-ம் ஆண்டு அரசியலில் பங்குகொள்ள எண்ணினர். அன்று முதல் இன்றளவும் ஓயாமல், ஒழியாமல் வக்கீல் தொழிலைவிட அதிகமாகத் தேச சேவையே செய்து வந்தார்.

ஐயர் அவர்கள் பிரபல வக்கீல். தமிழகத்தில் வக்கீல் தொழிலில் அன்னார்போன்று சிறந்து விளங்கியவர் சிலரேயாவர். வக்கீல் தொழிலில் இவருடைய சலியா உழைப்பையும், நுண்ணிய அறிவையும் கண்டு எதிர்தரப்பு வக்கீல்களும், ஜட்ஜுகளும் போற்றாமலிருந்ததில்லை. கட்சிக்காரரிடம் கண்டிப்பாகத்தான் வழக்குக்குத் தக்கபடி பீஸ் கேட்பார். வாங்கிய பணத்திற்கு வஞ்சகம் இல்லாமல் இரவு பகலாக

உழைத்து வழக்கை வெற்றிபெறச் செய்வார். இறக்கும் வரையில் பெரும் வழக்குகள் வந்து கொண்டே இருந்தன. கேட்கும் பணத்தை கொடுக்கக் கட்சிக்காரர்கள் தயாராக இருப்பார்கள். காரணம் உண்மை உழைப்புத்தான். ஐயரிடம் சென்றால் வழக்குக் கண்டிப்பாக ஜயித்துவிடும் என்பது கட்சிக்காரர்ளுடைய நம்பிக்கை. வரும் பெரும் கட்சிக்காரர்கள் ஐயர் அவர்கள் நாள் தவறாமல் நூற்பதையும், கதரிடம் அன்னாருக்கு இருந்துவரும் ஆர்வத்தையும் பார்த்து, அன்னார் சொல்லாமலே நாளாவட்டத்தில் கதர் ஆடை வாங்கி, உடுத்தத் தவரமாட்டார்கள். தவிர ஐயர் அவர்கள்போன்று, தேசாபிமானங் கொண்டு அன்னார் ஈடுபடும் நிர்மாணத் திட்டங்கள் எல்லாவற்றிற்கும் தங்களால் முடிந்த ஆதரவு கொடுப்பார்கள். சுயராஜ்யக்கட்சி ஏற்பட்ட 1924-ம் வருடம் முதல் உப்புப் போராட்டம் ஆரம்பித்த 1930-ம் வருடம் வரை சம்பாதித்ததுதான் இப்பொழுதுள்ள ஐயரின் ஆஸ்தி. இதுபோன்று பத்துமடங்குக்கு அதிகமாகவே நாட்டின் நிமித்தம் செலவழித்திருப்பார்.

## கதர்

1924-ம் வருடம் சட்டசபை செல்ல வேண்டுமென்ற காலத்தில் மாறுதல் வேண்டாத காந்தியடிகளையும், ராஜாஜியையும் பின் பற்றி நடந்தார். கதர் வளர்ச்சியின் ஆரம்பக்காலத்தில் மதுரை நகரில் தெருக்கள்தோறும் சென்று, வீடு வீடாகத் தொண்டர்களுடன் கதர் ஆடை விற்பனை செய்து வருவார். பஜனையோ, ஊர்வலமோ நடந்தால் முன்னின்று

நடத்துவார். பாரதிபாடல் பாடுவதில் ஐயர் அவர்களுக்கு அலாதிப் பிரியம். பாரதி பாட்டுத்தான் தன்னைத் தேச சேவைக்கு இழுத்தது என்று சொல்வார். கோர்ட் விடுமுறை நாட்களில் தன்னைப் போன்ற ஆர்வம் கொண்ட தொண்டர்களைக் கூட்டிக்கொண்டு, கதர் ஜவுளியையும் தோளில் சுமந்துகொண்டு கிராமாந்திரங்களுக்குப் பிரசாரம் செய்யக்கிளம்பிவிடுவார் கிராம மக்களுடன் பழகி, அவர்கள் மனப்போக்கின்படி நடந்து தேசப்பற்றும், சேவா உணர்ச்சியும் உண்டாக்குவதிலும் தன்னுடன் சேர்ந்த ஊழியர்களை அவ்வழிகளில் பழக்குவதிலும் திறமைமிக்கவராயிருந்தார் என்றால் புகழ்ச்சியன்று. தொண்டர்களைத் தெருவில்—வீட்டில்—சிறையில்—கிராமப் பிரயாணங்களில் சமத்துவமாக அழைத்துச்சென்று, தனது அனுபவ வாயிலாக அறிந்த மேற்கோள்களை எடுத்துச்சொல்லித் தந்தை போன்றும், ஆசான் போன்றும் அன்பாய் இருந்து வந்தார். ஐயரின் வார்த்தை என்றால் யாரும் தட்டமாட்டார்கள். "நா அசைந்தால் நாடசையும்" என்பார்கள். இம்மொழிக்கு இலக்காகக் காணலாம் ஐயரின் வார்த்தையை.

## மதுவிலக்கு

1922, 1923, 1930-ம் வருடங்களில் நடைபெற்ற கள்ளுக்கடை மறியலிலோ, 1931-ல் காந்தி-இர்வின் ஒப்பந்தக் காலத்தில் நடைபெற்ற ஜவுளிக்கடை மறியலிலோ ஒரு மணி நேரமாவது ஐயர் அவர்கள் கலந்துகொள்ளத் தவறமாட்டார்கள். ஓர் சமயம் அரசரடிக்கடுத்த சம்மட்டிபுரம் கள்ளுக்கடையில் ஐயர்

அவர்கள் மறியல் செய்யும் காலத்தில் 'வேண்டு மென்றே ஒரு சிலர் கள்ளுக்குடத்தை ஐயர் தலையில் கொண்டு வந்து, அபிஷேகம் செய்து வைத்தனர். ஐயர் பொறுமையுடனிருந்து மறியலை விடாது நடத்தினர். எட்ட நின்ற பொது மக்கள் அடங்காக் கோபம் அடைந்தும், ஐயரின் பொறுமைக்கும், வார்த்தைக்கும் கட்டுப்பட்டு, அடங்கிக்கிடந்தனர். ஓர் சமயம் மேலூர்த் தாலூகாவைச் சேர்ந்த வெள்ளலூர் நாட்டுக் கூட்டத்திற்குச் சென்றிருந்தார். அதில் நாட்டார் முடிவு செய்தால் அதைச் சேர்ந்த பல கிராமங்கள் கட்டுப்படும். கூட்டத்தில் பேச வேண்டு மென்றால் சட்டை போடக்கூடாது. இடுப்பில் வேஷ்டி கட்டிக் கொள்ளவேண்டும். ஆனால் நாட்டார்கள் ஐயர் அவ்விதம் செய்து பேச வேண்டுமென்று சொல்லவில்லை. தானே சட்டையைக் கழற்றினர். இடுப்பிலே வேஷ்டியைக் கட்டிக்கொண்டார். வணக்கத்துடன் நாட்டார்களிடம் கள் குடிக்கக் கூடாதென்று, கிராம ஜனங்களுக்கு ஓலையனுப்ப வேண்டு மெனக் கேட்டுக்கொண்டு ஒருமணி நேரம் பேசினர். நாட்டார், கள் மாத்திரம் அன்று சுருட்டு, பீடி, கஞ்சா, அபின், புகையிலை முதலிய லாகிரி வஸ்துக்கள் கூட உபயோகப் படுத்தக்கூடாதென்று கட்டுப்பாடு செய்தனர்.

## ஹரிஜன சேவை

காந்தியடிகள் நிர்மாணத்திட்டங்களில் ஐயர் அவர்களுக்கு ஜீவநாடிபோன்றது ஹரிஜன சேவை. ஹிந்து சமூகத்தில் தீண்டாமையை ஒழித்து, ஹரி

ஜனங்களுக்குச் சமூகத்தில் எந்த இடத்திலும் சிறப்பாக ஆலயங்களிலும் சம உரிமை கிடைப்பதற்கு சர்வசங்கப் பரித்தியாகம் செய்தது நமது ஐயர்தான். அன்னூர் தகப்பனார் விண்ணுலகெய்திய காலத்துத் தகப்பனாருக்குச் செய்யவேண்டிய ஈமக் கிரியை முதலிய சடங்குகளுக்கு வைதீகர்கள் எவ்வளவோ இடையூறு விளைவித்தனர். ஐயர் யாவற்றையும் சிறிதும் சளைக்காது பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு, சமாளித்து வெற்றி பெற்றார். நமது பாரதநாட்டில் ராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகானந்தர், ராஜாராம் மோகனராய், தயானந்த சரஸ்வதி, சுவாமி சிரத்தானந்தர், லாலா லஜபதிராய், ராஜாஜி, தக்கர் பாபா போன்ற பல பெரியோர்கள் தீண்டாமையை அறவே ஒழிப்பதற்குத் தங்கள் வாழ்நாள் முழுதும் வேலை செய்தனர். அவர்கள் காலத்தில் நடைபெறாத ஹரிஜன ஆலயப்பிரவேசம் நமது ஐயர் அவர்களால் செய்து முடிக்கப்பெற்றது எவராலும் என்றும் மறுக்கவும், மறக்கவும் முடியாது.

## ஆலவாயின் அற்புதம்

1937-ல் ஆலவாயில் ஏற்பட்ட ஆலயப்பிரவேச சமயம் ஐயர் அவர்கள் தனது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணிக்கத் தயாராக இருந்தார். இந்தச் சமயத்தில் தமக்கு வக்கீல் தொழிலில் குருவாக இருந்தவரும், சனாதனிகளின் தலைவருமான காலஞ்சென்ற என். நடேசையரை எதிர்த்து அன்னூர் தொடுத்த பல வழக்குகளில் வாதாடி

வெற்றி கண்டார் நமது ஐயர். இந்த இயக்கம் குரு - சிஷ்யர் போராட்டமாகவே நடைபெற்றது. ஆலயப் பிரவேசத்திற்குக் கை கொடுத்து உதவியவர்கள் இருவர். ஒருவர் அதுகாலே மீனாட்சியம்மன் கோவில் டிரஸ்டியாகவிருந்த ஆர். எஸ். நாயுடு என்ற பழம்பெரும் தேசபக்தர். இவர் கூடவே இருந்து வைத்தியநாதையர் தலைமையில் நடைபெற்ற ஹரிஜன ஆலயப் பிரவேசத்தைச் செவ்வனே நடத்திவைத்தவர். இரண்டாவது, முதல்மந்திரியாயிருந்த நமது ஒப்பற்றதலைவர் இராஜகோபாலாசாரியார். அப்பொழுதிருந்த சட்டப்படி ஆலயப்பிரவேசம் செய்தவர்களைச் சிறைக்கு அனுப்பாமல், அவசர அவசரமாக ஆலயப்பிரவேசச் சட்டம் கொணர்ந்து, சட்டசபைகளில நிறைவேற்றி, ஆலயப் பிரவேசத்தை வெற்றிபெறச் செய்தவர். பெரும் எதிர்ப்பு இருந்தும் தமது நுண்ணிய அறிவைக் கொண்டு சாமர்த்தியமாக சமாளித்தார் ராஜாஜி. இது கண்டு காந்திஜீ பெரும் மகிழ்வு எய்தினர். ஹரிஜன ஆலயப்பிரவேசம் நடைபெறாத வரை எந்தக கோயிலுக்கும் செல்வதில்லை என்று விரதமெடுத்துக் கொண்டிருந்த மகாத்மா காந்தியடிகள் 1947-ம் வருடம் திருவாலவாய் க்ஷேத்திரம் வந்து, மீனாட்சியம்மனைத் தெரிசித்துச் சென்றது யாவரு மறிந்ததே.

## பதவிப்பற்று அற்றவர்

முனிஸிபாலிடி, ஜில்லாபோர்டு, சட்டசபை முதலிய ஸ்தாபனங்களில் பதவிகொள்ள எப்பொழுதுமே அவருக்கு ஆசை கிடையாது. கட்டாயத்தின்

பேரில் 1946-ல் சட்டசபைத் தேர்தலில் நின்று வெற்றி பெற்று வேலை செய்து வரலானர். பதவிகள் அன்னுரைத் தேடிவரும். உதறித் தள்ளுவார். படேல், ராஜாஜி போன்றவர்கள் வற்புறுத்தலின் பேரில் தான் சட்டசபைக்குச் சென்றார். அங்குக் கட்சிக் கூட்டத்தில் தனது அபிப்பிராயத்தை தெள்ளத் தெளிய எடுத்துச் சொல்வதில் பின் வாங்கமாட்டார். காங்கிரஸ் நிர்வாகத்திலும், பலபேர்களின் ஏகோபித்த வேண்டுகோளின் பேரிலேயே தலைவர், பொக்கிஷதார் பதவிகளை ஏற்றுக்கொள்ளுவார். எதை வகித்தாலும் உண்மையுடனும், திறமையுடனும், நேர்மையுடனும் செயல் புரியும் சக்தி அன்னுருக்கு உண்டு. ஸ்தாபனத்தில் ஒழுங்கில்லை என்றால் சீர் திருத்த முயல்வார். முடியாவிடில் விலகிவிடுவார். எவ்வளவு அபிப்பிராய பேதங்களேற்பட்டாலும் நல்ல காரியங்களில் விட்டுக்கொடுக்க மாட்டார். தன்னுடன் அபிப்பிராய பேதங்கொண்டு ஒருவர் விலகிச் சென்றாலும், அன்னுர் அவதிப்படுங்காலத்தில் கண்டு சகியாது வலிய வந்து உதவும் அருங்குணம் அன்னுருக்கு உண்டு.

## சிறைவாசம்

1930-ல் மகாத்மா காந்தி உப்புப் போராட்டம் ஆரம்பித்ததும் அவ்வியக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டார். அதுசமயம் வேதாரண்யம் சென்ற அன்னுர், சர்க்கார் அங்கு நடத்தும் கொடுமையைக் கண்டு சகியாது 144 சட்டத்தை மீறி 6 மாதம் சிறைத் தண்டனையடைந்தார். 1932-ல் நடைபெற்ற சட்ட

மறுப்புப் போராட்டத்தில் திலகர் சதுக்கத்தில் முதன் முதல் பேசி ஒரு வருடம் சிறைத் தண்டனை யடைந்தார். வெளிவந்ததும் வக்கீல் வேலை பார்ப்ப தற்கே சிறிது இடையூறு விளைவித்தனர் சர்க்கார் அதிகாரிகள். சிறிது காலத்தில் அவர்களே மறுபடியும் தொழிலிலீடுபட அனுமதி தந்தனர். 1942-ல் 'வெள்ளை யனே வெளியேறு' என்று காந்தியடிகள் துவக்கியபோரில் அன்னார் சிறை சென்றதைக் கேள்வியுற்றதும் ஐயர் 144 சட்டத்தை மீறி 6 மாதம் காவல் தண்டனை யடைந்தார். தண்டனை முடிந்ததும் பாதுகாப்பில் வைக்கப்பட்டார். அதுசமயம் அன்னார் மூத்தகுமா ரரும், திருச்சி அட்வகேட்டும், பிரபல தேசபக்தரு மான என். ஹாலாஸ்யமையர் மருகருமான ராஜா அவர்கள் நோய்வாய்ப்பட்டு அகாலமரணமடைந்தார். அன்னாருக்கு ஓர் ஆண் மகனுண்டு. அன்னார் மனைவி யார் கல்வியில் தேர்ச்சிபெற்று வேதாரண்யத்தில் கஸ்தூரிபா குருகுல வித்தியாலயத்தில் ஆசிரியையாக சேவை செய்து வருகிறார்.

## ஸ்ரீமதி அகிலாண்டம்மாள்

ஐயர் அவர்களின் வாழ்க்கைத் துணைவியான ஸ்ரீமதி அகிலாண்டம்மையார், கள்ளங்கபடமற்ற குழந்தை உள்ளம் படைத்தவர். அன்னார் ஈடுபடும் ஒவ்வொரு துறையிலும் உற்ற துணையாயிருந்து ஆதரவு புரிபவர். நூல் நூற்பதிலும், வீட்டில் நடை பெறும் ஹிந்து வகுப்பில் படிப்பதிலும் சேரிகளுக்குச் சென்று, ஹரிஜனங்களுக்குத் தொண்டாற்றுவதிலும் கலந்துகொள்ளத் தவறமாட்டார். வீட்டிற்கு விஜயம்

செய்யும் விருந்தினரை உபசரிப்பதில் ஐயருக்கு முன்னால் நிற்பார். 1932 போராட்டத்தில் ஐயர் சிறை சென்று திரும்பியதும், இயக்கம் தளர்ச்சியுறுவதை கண்டார்; அன்னார் யோசனைப்படி பெண்களுடன் ஜவுளிக்கடை மறியல் நடத்திச் சிறை தண்டனையும், அபராதமும் ஏற்றார். 1942-ல் தனிப்பட்ட சட்டமறுப்பிலும் அன்னார் சிறை சென்றார். இருவரும் வாசுகியும்-வள்ளுவரும் போல் வாழ்க்கை நடத்தினர்.

## அட்வகேட் சங்கரன்

குழந்தை முதற் கொண்டே தேசீயத்தில் ஊறினவர் ஐயரின் இளைய குமாரர் சங்கரன். ஹிந்துமதப் பற்றும் அன்னாருக்கு அதிகம். பாகிஸ்தான் பிரிவினை செய்தாவது தேசீயச் சர்க்கார் அமைத்து விடலாம் என்று ராஜாஜி பிரசாரம் செய்யும் காலத்து, மதுரைக்கு வந்து, வழக்கம்போல் ஐயர் வீட்டில் தங்கியிருந்தார். ஊழியர்கள் கூட்டத்திலும், தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் ராஜாஜிக்கு எதிரிடையாகச் சில காங்கிரஸ்காரர்கள் கேள்விகள் கேட்டு இடையூறு விளைவித்தனர். தமது குமாரன் சங்கரனும் அதில் கலந்து கொண்டதாகத் தெரிந்து, ஐயர் மிகவும் கடிந்து கொண்டார். 1942 போராட்டத்தில் ஆகாகான் மாளிகையில் மகாத்மா காந்தி உண்ணு விரத காலத்தில் சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சங்கரன் கல்லூரி மறியல் செய்து 6 மாதம் சிறைத் தண்டனையுற்றார். சமீபத்தில் மதுரையில் நடைபெற்ற ராமாயண நாடகக் கிளர்ச்சியில் சங்கரனையும் சேர்த்து வழக்குத்

தொடுத்திருக்கின்றனர். இவர் மனச்சாட்சியில் ஐயரைப்போல் நடப்பவர். பொது விஷயத்தில் ஊக்கம் அதிகம். இன்னும் சிறிது காலம் ஐயர் அவர்கள் உயிருடன் இருந்தால் தொழில் துறையிலும் சங்கரன் நன்றாக முன்னேறியிருப்பார். கடைசிக் குமாரன் வை. சதாசிவம் B. Sc. வகுப்பில் படித்து வருகின்றார். ஐயர் அவர்களின் புத்திரிகள் சாவித்திரி, சுலோசனா இருவரும் விவாகமாகிக் குழந்தைகளுடன் நல்ல நிலைமையிலிருக்கின்றனர். ஐயரின் இளைய சகோதரர் அ. சுப்பிரமணிய ஐயர் பள்ளி ஆசிரியராக இருந்து வருகின்றார். 1923-ல் மதுரையில் நடைபெற்ற கள்ளுக்கடை மறியலில் இவர் பங்குகொண்டு ஒரு வருடம் சிறைத் தண்டனை யுற்றார். தேசாபிமானத்தில் ஆழ்ந்தது நமது ஐயரின் குடும்பம்.

## பரோபகாரம்

1915-ல் ஐயர் பாதுகாப்புக் கைதியாக விருந்து விடுதலை பெற்றதும் மதுரையில் சுயமரியாதை மகாநாடு நடைபெற்றது. அதில் கலவரம் ஏற்பட்டு, ஆற்றோரம் நிறுவப் பெற்ற கொட்டகைக்குத் தீ வைத்து விட்டனர். பிரதிநிதிகள் உயிர்க்குப் பயந்து ஓடோடி விட்டனர். ஐயர் இதைக் கேள்வியுற்று விரைந்து மகாநாடு நடைபெற்ற இடத்திற்குச்சென்று ஆவேசமுற்ற பொதுமக்களை சமாதான படுத்த பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். அவர் இதில் தலையிடாமலிருந்தால் யாவருக்கும் மிகுந்த சிரம மேற்பட்டிருக்கும்.

முதல் மந்திரி ஸ்ரீ காமராஜ் வேண்டுகோளின் பேரில் தியாகி கருப்பையா பாரதி நிதிக் கமிட்டிக்குத் தலைவராக விருந்து, நிதி திரட்டிச் சமீபத்தில்தான் அக்குடும்பத்திற்கு ஓர் வீடு வாங்கி வைத்தார்.

ஆவடிக் காங்கிரஸ் சமயம் ஹார்வி மில்லில் சுமார் இரண்டாயிரம் பேர்கள் உள்ளிருந்து வெளியே செல்ல மறுத்துச் சத்தியாக்கிரஹம் செய்தனர். அதுசமயம் ஐயரவர்கள் உடனே சம்பந்தப்பட்ட இரு சாரார்களுடன் பேசி சமரஸம் காண வழிதேடினர்.

சமீபத்தில் மதுரையில் நடந்த ராமாயணக் கிளர்ச்சி சமயம் ஐயரவர்கள் நடுநிசியில் கிளர்ச்சி நடந்த இடத்திற்குச் சென்று அதிகாரிகளைக் கண்டு, பேசிச் சமாதானங் காண முயற்சித்தது யாவரு மறிந்ததே.

1923 கொடிப் போராட்டம், 1930 உப்புப் போராட்டம், 1934 சட்டசபைக்குச் செல்லல், 1937 மந்திரிபதவி ஏற்றல், 1945 திருப்பரங்குன்றம் ஊழியர்கள் மகாநாடு ஆகிய சமயங்களில் ராஜாஜிபோன்ற தலைவர்களும், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லா ஊழியர்களும் வந்து, ஐயர் வீட்டில் கலந்து கொள்ளத் தவறமாட்டார்கள். தமிழகத்தின் அரசியல் மந்திராலோசனை அங்குத்தான் நடைபெறும். அப்பொழுது ஐயரின் இல்லம் அன்ன சத்திரம் போன்று விளங்கும்.

## நோய் வாய்ப்படல்

சென்ற ஒரு வருட காலமாக "லுகேமியா" என்னும் கொடிய வியாதியினல் ஐயர் கஷ்டப்பட்டார். இரு முறை சென்னை சென்று இரண்டொரு மாதங்

கள் தங்கிச் சிகித்சை பெற்றுத் திரும்பினர். உடல் மெலிந்திருந்தாலும், மனோ பலம் கொண்டு சில முக்கிய வழக்குகளில் ஆஜரானர். குமாரர் வை. சங்கரன் உடன் போய் வருவார். அத்துடன் காந்தி ஜயந்தி, சர்வோதய தினம் போன்ற நாட்களில் பலர் வேண்டுகோளைத் தட்டாது கூட்டங்களில் கலந்து கொள்வார். பல அருள் நெறித் திருக்கூட்டங்களிலும் கலந்து கொண்டு தொண்டாற்றுவார். மூன்றும் முறையாகச் சிகித்சையின் பொருட்டுச் சென்னை செல்வதற்கு முன்னல் ராஜாஜியுடன் வேதாரண்யம் சென்று, கஸ்தூரிபாய் குருகுலத்தில் அன்னபூர்ண விடுதித் திறப்பு விழாவில் தலைமை தாங்கிப் பேசினர். கடைசியாக அன்னர் செய்த பிரசங்கம் அதுதான். பிப்ரவரி மீ 19உ யன்றுதான் சென்னை சென்றார். எதிர்பாராதபடி 1955-ஆு பிப்ரவரி-மீ 23-உ இரவு 10-மணிக்கு நமது ஐயர் இறைவனடி சேர்ந்தார். அன்று மாலைதான் சிகித்சை பெற்ற மருத்துவ விடுதியில் ராஜாஜி சென்று, ஐயர் அவர்களைப் பார்த்து, ஆறுதல சொல்லி, குணமடைந்து விடுவார் என்ற நம்பிக்கையுடன் விடை பெற்றுச் சென்றார். "விதியை வெல்ல யாரால் முடியும்?"

## இறுதி மரியாதை

சென்னையில் காலமான ஐயரின் சடலம் அன்னர் மனைவியார், மாப்பிள்ளைகள், திருச்சி கோபால ஸ்வாமி ஆகியோர் துணைகொண்டு, தினமணி காரியாலயத்திலிருந்து, 24உ காலை 9 மணிக்கு, மதுரையி

லுள்ள அன்னார் வீட்டிற்கு மோட்டார் வானில் கொண்டுவரப்பட்டது. அதற்குள்ளாகச் செய்தி கேட்டு மதுரை மாநகரமே துக்கத்திலாழ்ந்தது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், காங்கிரஸ் ஊழியர்கள், வக்கீல்கள், வர்த்தகப் பிரமுகர்கள், மாணவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், பொது மக்கள், ஹரிஜனங்கள் யாவரும் சோகமே உரு வெடுத்துத் தங்கள் தலைவருக்கு அன்னார் வீட்டில் வந்து இறுதி மரியாதையைச் செலுத்தினர். மாலை 2-மணிக்கு இருபதினாயிரத்திற்கு மேற்பட்ட மக்க ளடங்கிய ஒரு மைல் நீளத்திற்கதிகமான பிரேத ஊர்வலம் பல தெருக்கள் வழிச் சென்று மாலை 4-மணிக்கு மயானத்தை அடைந்தது. அங்கிருந்த மாபெருங் கூட்டத்தில் பல கட்சியைச் சேர்ந்த பிர முகர்களும், ஐயரின் அரும் குணங்களைப்பற்றி உருக்க மாகப் பேசினர். மாலை 4-45-மணிக்கு ஐயரின் புத்திரன் வை. சங்கரன் வைதீக முறைப்படி தன் தந்தையின் உடலுக்குத் தீமூட்டினார். வைதீகர்கள் வேதமந்திரம் கோஷிக்க, பெண்கள் ராமபஜனை செய்ய, பொதுமக்கள் கோவிந்தா! கோவிந்தா! என்று கோஷமிட இறுதிச்சடங்கு நடந்தேறியது. அன்று பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டன. தொழிற் சாலைகளும், கடைகளும் அடைக்கப்பட்டன. நீதி ஸ்தலங்களில் நீதிபதிகளும், நியாயவாதிகளும் அனுதா பம் தெரிவித்தனர். தேசத்திலுள்ள பிரமுகர்களிட மிருந்து அனுதாபத் தந்திகளும், கடிதங்களும் தினமும் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

## சட்டசபையில் அனுதாபம்

"தேச முன்னணித் தலைவர்களில் ஒருவர்; காந்தியப் பாதையில் பின்பற்றி நடந்த உத்தமர்; தன்னலமற்ற தொண்டாற்றிய பழுத்த தேச பக்தர்; தமிழ்நாட்டின் அருந்தவப் புதல்வர்; ஹரிஜனத் தொண்டில் தலைசிறந்து விளங்குபவர்; ஏழைகளின் நண்பர்; பெருந்தகையாளர்; மனச்சாட்சியை மட்டும் மதித்துப் பயமின்றித் தம் கருத்தைத் தெரிவித்து நடக்கும் சிலர்; பொது வாழ்வில் நேர்மைக்கு வழிகாட்டி; பெரும் வக்கீல்; பார்லிமெண்டரி முறைகளில் தேர்ந்தவர்; எதிராளிகளிடம் நேர்மையிருந்தால் அதை உணர்ந்து பாராட்டும் பரந்த நோக்கமுடையவர்" இவ்வாறெல்லாம் 1955-ம் வருடம் பிப்ரவரி மீ 24-உயன்று காலை மதுரை அ. வைத்தியநாதையரைப் பற்றி அனுதாபம் தெரிவிக்கும் முறையில், சென்னையிலுள்ள இரு சட்டசபைகளிலும் பல கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் ஐயரின் குணாதிசயங்களைப் பற்றிப் பாராட்டிப் பேசினர்.

## ராஜாஜியின் பாராட்டு

சமீபத்தில் மேல் சபையில் ஐயர் அவர்கள் அனுதாபத் தீர்மானம் நிறைவேறும் சமயம் ராஜாஜி அவர்கள் 'நமது வைத்தியநாதையரின் துணிச்சலும், தூய்மையும்தான் ஆலயப்பிரவேசச் சட்டம் இயற்றியதற்குக் காரணம். இல்லாவிட்டால் இப்படி ஒரு சட்டம் வருவது சந்தேகந்தான்' என்று தனது உள்ளத்தைத் திறந்து வெளியிட்டார். இதற்கு நமது தேச ஹரிஜனங்கள் யாவரும் வாழையடி வாழையாகக் கட

மைப்பட்டிருக்கிறார்கள். சுமார் ஆயிரம் வருஷங்களுக்குமுன் தோன்றிய இராமானுஜருக்கு அடுத்தபடி ஹரிஜன ஆலயப்பிரவேசம் நடத்தியவர் நமது வைத்தியநாதையர் அவர்களே. இவருடைய பெயர் உலகமுள்ளளவும் சரித்திரத்தில் அழியாப் புகழ் பெறும் என்பதற்குச் சந்தேகமில்லை. அன்னார் திருநாமம் என்றென்றும் வாழ்க.

அன்னாரின் "தூய்மை, துணிச்சல், அறிவு, ஆற்றல், தேசபக்தி, தெய்வபக்தி, பொறுமை, பரோபகாரம் முதலியனவற்றை வருங்காலத் தமிழக வாலிபர்கள் கைக்கொள்ள வேண்டுவ தவசியம். அமரர் வைத்தியநாதையரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

---

சென்னையில் ஐயர் சிகித்சை பெறும்காலத்து மதுரைமக்களின் பிரார்த்தனைக்கு அன்னார் அனுப்பிய கடிதம்.

29, Edward Elliots Road,
MADRAS-4.

கனம் ஸ்ரீ R. சுந்தரராஜ ஐயங்கார் அவர்களுக்கு A. வைத்தியநாதய்யர் எழுதியது.

1. உங்கள் 1—8—54 உ கடிதம் கிடைத்தது. ராஜாஜி Reading Room அங்கத்தினர்களும், தாங்களும், இன்னும் வியாபாரிகள், முனிசிபல் கௌன்சிலர்களும் என் சௌக்கிய விஷயமாக இவ்வளவு கவலையும், சிரத்தையும் எடுத்துக்கொண்டு, அன்னை மீனாக்ஷி அம்மனிடம் பூசை அபிஷேகம் விசேஷ

கீழ்க்கண்ட இடங்களில் இப்புஸ்தகம்
கிடைக்கும்

---

1. இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்
புக் ஷாப், மதுரை.
2. R. சுந்தரராஜ அய்யங்கார், ராஜாஜி வாசகசாலை,
தானப்ப முதலி தெரு, மதுரை.
3. சத்தியமூர்த்தி வாசகசாலை,
மேலச்சித்திரை வீதி, மதுரை.
4. பி. ஆர். சேஷ அய்யங்கார்,
44/3, சந்தைப்பேட்டைத் தெரு, மதுரை.

---

ஐயரவர்களின் ஜீவிய சரித்திரம் பல விஷயங்க
ளுடன் விரிவாக நல்ல முறையில்
கூடியசீக்கிரம் வெளிவரும்.

---

இப்புத்தகத்தின் ஆக்கியோன்
ஸ்ரீனிவாஸ வரதய்யங்காரால் எழுதப்பெற்ற இதர நூல்கள்

1. மதுரை ஜில்லாத் தியாகிகள் மலர்.
2. சுவாமி சுப்பிரமணிய சிவம்.
3. விநாயக தாமோதர சவர்க்கார்.

---

Printed and Published by
E. M. Gopalakrishna Kone at Excelsior Power Press
Madurai:-55.